# வெளியீட்டுரை

பிள்ளையார் காப்பு கதையை சுன்னாகம் அரங்கநாதரின் அருந்தவப் புதல்வன் வரத பண்டிதனார் சைவ மக்களுக்குத் தொகுத்து எழுதி உதவியுள்ளார். இந்நூல் பல ஆலயங்களில் கிடைப்பதில்லை என்ற பலரின் கோரிக்கைக்கிணங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பதிப்பிக்கப்படுகின்றது.

இறை சிந்தனையை வளர்த்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி சமைத்துக் கொடுப்பவை புராணங்கள். இந்நூலில் இலிங்க புராணம், கந்த புராணம், உபதேச காண்டம் முதலிய நூல்களில் சொல்லப்பட்ட பிள்ளையாரின் மகிமைகளும் அருட் செயல்களும் திரட்டி எழுதப் பட்டுள்ளன.

கார்த்திகை மாதம் பூரணையும் கார்த்திகை நட்சத்திரமும் கழிந்த மறுநாள், பிரதமை முதல் மார்கழி மாதச் சுக்கில பட்ச சஷ்டி ஈறாக இருபத்தொரு நாட்கள் பிள்ளையார் கதைக் காப்பு விரதம் அநுட்டிக் கப்படுகின்றது.

விரத காலத்தில் ஆசார சீலராக தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து இருபத்தொரு நாட்களும் கோயிலுக்குச் சென்று விநாயகப் பெரு மானைத் தரிசிக்க வேண்டும். இருபத்தொரு நேர் இழைகளால் ஆன காப்பைப் பெற்று ஆண்கள் வலக் கையிலும், பெண்கள் இடக் கையிலும் கட்டிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் பூசையிற் கலந்து பூ பெற்றுக் கட்டிய காப்பில் சாத்திக் கொள்வதுடன் பிள்ளை யார் கதை படிப்பையும் பக்தி சிரத்தையுடன் கேட்க வேண்டும்.

இருபத்தொரு நாட்களும் ஒரு பொழுது உண்டு இருபத்தோராவது நாளாகிய சஷ்டி அன்று உபவாசமிருந்து சஷ்டி முடிந்த பின் கட்டிய காப்பை கழற்றுவித்து நீர் நிலைகளில் போட்டு நீராட வேண்டும். முறைப்படி தட்சணை, தானம் என்பன கொடுத்து முடிந்த பின் பாரணை பண்ணி விரதத்தை முடித்துக் கொள்ளல் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

